சிறப்பிதழ்
**Special Issue**

Chief Editor
Dr. M. Sadik Batcha

Advisory Editor
Dr. N. Chandra Segaran

Editorial Board
Dr. MAM. Rameez
Dr. Jeyaraman
Dr.A. Ekambaram
Dr. G. Stephen
Dr. S. Chitra
Dr. S.Senthamizh Pavai
Dr. A. Shunmughom Pillai
Dr. P. Jeyakrishnan
Dr. Seetha Lakshmi
Dr. S. Easwaran
Dr. Kumara Selva
Dr. Ganesan Ambedkar
Dr. Krishanan
Dr. Kumar
Dr. S. Kalpana
Dr. T. Vishnukumaran
Dr M. N. Rajesh
Dr. Govindaraj
Dr. Uma Devi
Dr. Senthil Prakash
Dr. Pon. Kathiresan
Dr. S. Vignesh Ananth
Dr.M. Arunachalam
Dr. S. Bharathi Prakash

01 மார்கழி 2052
16th December 2021

ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)

# Journal of Modern Thamizh Research

(A Quarterly International Multilateral Thamizh Journal)
Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

பன்னாட்டு கருத்தரங்கம் -2021
சிறப்பிதழ் : தமிழ்த்துறை
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி - 642 001, தமிழ்நாடு, இந்தியா

## தமிழ் இலக்கியங்களில் சொல்வளமும் பொருள்வளமும்

சிறப்பிதழ் ஆசிரியர்

Special Issues Editor
முனைவர் பா. அருள்ஜோதி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை

*Published by*
**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

35

# மனிதநேய சொற் பொருள் விளக்கம்

**து.யோககலைவாணி**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி

நெறியாளர்
**முனைவர் பா.அருள்ஜோதி**
தமிழ் உதவிப்பேராசிரியர்
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி

## ஆய்வுச்சுருக்கம்

இப்பூமியில் தோன்றும் உயிர்கள் அனைத்தும் மனிதநேயம் என்னும் பண்புடன் காணப்பட வேண்டும் என்பது சாலச்சிறந்தது. தாவரங்களிடமும் அன்பு பாராட்ட வேண்டுமென்பதை வள்ளலார் ''வாடிய பயிரைக்கண்டபோதெல்லாம் வாடினேன்" என்றார். அவ்வகையில் மனிதநேயம், உயிர்களிடத்தும் மனிதன் காட்டும் அன்பு என்பதேயாகும். அன்பினால் அனைத்தினையும் வெல்லமுடியும். எனவே ஆன்றோர்கள் அன்பெனும் பிடியினுள் அகப்படும் மலையே என்றார். இத்தகைய சிறப்புமிக்க மனிதநேயம் குறித்த சொற் பொருள்களை ஆராய்ந்து கூறுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## முன்னுரை

உலகில் தோன்றி மறையும் உயிர்கள் பலவற்றுள்ளும் மனிதப் பிறவியே சிறப்பிடம் பெற்று முதன்மை பெறுகின்றது. பிற உயிரினங்களான பறவைகள், விலங்குகளின் வாழ்க்கையில் தலைமுறைகள் மாறினாலும் வாழ்க்கை முறைகள் மாறாமல் தொடங்கிய இடத்திலிருந்தே மீண்டும் மீண்டும் தொடங்குகின்றன. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் எப்படி வாழ்ந்தனவோ அப்படித்தான் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால் மனித வாழ்க்கை மட்டும் தான் ஏராளமான முன்னேற்றத்தைக் கண்டு வருகின்றது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகக் காடுகளிலும் குகைகளிலும் விலங்கொடு விலங்காய் அலைந்து திரிந்து கொண்டிருந்த மனிதன் அந்த விலங்குகளிடமிருந்து தன்னை வேறுபடுத்திக் கொள்ள சிந்தனையைத் துணையாய்க் கொண்டான். அச்சிந்தனையின் விளைவாய் உணவு, உடை, உறையுள் ஆகியவற்றைக் உருவாக்கிக் கொண்டதோடு சகமனிதர்களோடு கூடி வாழவும் தலைப்பட்டான். அத்தகைய கூட்டு வாழ்க்கையின் பயனாகச் சமுதாயம் தோன்றிற்று. ஒட்டு மொத்த சமூகத்தின் சிந்தனை, நாகரிகமாய் மலர்ந்து காலப்போக்கில் பண்பாடாகவும், கலாச்சாரமாகவும் பரிணமித்தது எனலாம். அப்பண்பானது மனிதகுலம் தழைப்பதற்கான நெறிகளை, உயர்பண்புகளை இடையறாது வலியுறுத்தும் கடப்பாட்டினைக் கொண்டதாக இயங்கி வருகின்றது. அவற்றுள்ள மனிதனை மனிதனாக அடையாளம் காட்டும் தலையாயப் பண்பாக விளங்குவதே மனிதநேயம் ஆகும். இம்மனித நேயத்தின் பொருள் குறித்து விளக்கி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## மனிதப் பிறப்பு

"தொல்காப்பியர் உயிர்களை ஆறுவகையாகப் பகுக்கின்றார். அவை

**"ஒன்று அறிவதுவே உற்ற அறிவதுவே**
**இரண்டு அறிவதுவே அதனொடு நாவே,**
**மூன்று அறிவதுவே அவற்றொடு கண்ணே,**
**ஐந்து அறிவதுவே அவற்றொடு செவியே,**

**ஆறு அறிவதுவே அவற்றோடு மனனே,**
**நேரிதின் உணர்க்தோர் நெறிப்படுத்தினரே"**
( தொல். மரபியல். நூ.1526)

என்பனவாகும். இதில் கிடைத்தற்கரிய மானிடப்பிறவி ஒன்று மட்டும் சிறந்து விளங்குவதற்குக் காரணம். ஆறாவது அறிவாகிய மன உணர்வே என்பதை இதன் மூலம் தெளியலாம். தன்னைப் பற்றி மட்டுமே கவலைப்படுவன விலங்கு. தன்னைச் சார்ந்தவர்களைப் பற்றியே கவலைப்படுபவன் மனிதனில் தெய்வம். மனிதன் விலங்கிலிருந்து வேறுபட்டதற்குக் காரணம் அவன் பேசும் மொழி மட்டும் மன்று அவனிடம் இருக்கவேண்டிய பொதுநலம் காணும் குணமே உரியதும் பெரியதும் ஆகும். (நீயே வெல்வாய், ப-94)என்று க.பஅறவாணன் அவர்கள் குறிப்பிடுவதும் இங்கு சிந்திக்கத் தக்கது.

நற்பண்புகள் நிறைந்து விளங்க வேண்டிய மனிதருள்ளும் விலங்கினைப் போன்ற பண்புடையவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மனித இயல்புகளுக்கு ஏற்ப நடவாதவர்கள். எனவே தான் தொல்காப்பியர் இவர்களை மாக்கள் என்னும் வகையில் சேர்த்து

**"மாவும் மாக்களும் ஐ அறிவினவே"**
( தொல். மரபியல். நூ.1531)

ஏன்ற அடியில் விளக்குகின்றார். இம் மனிதப்பிறவியின் சிறப்பை

**"வினை பல வலியினாலே வேறு வேறு யாக்கையாகி**
**நுனி பல பிறவி தன்னுள் துன்புறூஉம் நல்லுயிர்க்கு**
**மனிதரின் அரியதாகும் தோன்றுதல்..."**
(வளையாபதி, பா.5:1-3)

ஏன வளையாபதியும் எடுத்துரைக்கின்றது. மேலும், தொண்டு செய்யும் மனப்பான்மை உடையவர்களின் பண்பை, தொண்டு செய்யக் கற்றவன் துயரம் போக்கும் உற்றவன் சண்டைபோடும் மக்களைச் சரசமாக்கி வைக்கவே தீரவாழ்வு சொல்லுவான் தீமையாவும் வெல்லுவான் ஈரமற்ற செய்கைகள் வீரமென்றல் பொய்யென சேவை செய்யும் நல்லவன் செம்மை கண்ட வல்லவன், (கு. ராஜவேலு(தொ.ஆ) நாமக்கல் கவிஞரின் தேர்ந்தெடுத்த கவிதைகள், ப.171) என்று நாமக்கல் கவிஞரும் தனது கவிதை வரிகளில் விளக்குகின்றார். தேவர், மனிதர், மிருகம், பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் என்னும் எழுவகைப் பிறப்புகளில் மனிதப் பிறவி மட்டும் தனித்து சிறப்பிடம் பெறுவதற்குக் காரணம் அவனுடைய இரக்க குணமாகிய தொண்டு செய்யும் மனப்பான்மை ஒன்றே என்பதை இதன் மூலம் அறிய முடிகின்றது.

**மனிதநேயம் - சொல் விளக்கம்.**

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி "மனிதநேயம் என்ற சொல்லிற்குச் சமூக ரீதியில் சகமனிதன் மீது கொள்ளும் அன்பு, மதிப்பு போன்றவை" (ப.1091)என்றும் மனிதாபிமானம் என்ற சொல்லிற்கு "மனிதன் சக மனிதனின் மீது காட்டும் பரிவும் இரக்கமும் கலந்த உணர்வு" (மேலது) என்றும் விளக்கம் அளிக்கின்றது. மேலும்" நேயம் என்ற சொல்லிற்கு ஒன்றிடம் அல்லது ஒருவரிடம் காட்டும் ஈடுபாடும் அக்கறையும்" (ப.855) எனச் சுட்டுகின்றது. மெய்யப்பன் தமிழ் அகராதி, மனித நேயம் என்ற சொல்லிற்கு" மனிதன் மனிதனை மதித்துச் செலுத்தும் அன்பு" (ப.948) என்றும் மனிதாபிமானம் என்னும் சொல்லிற்கு மனிதன் மனிதன் மீது காட்டும் இரக்கஉணர்வு எனவும் விளக்க அளிக்கின்றது.

**மனிதநேயம் - வரையறை**

"பிறர் துன்புற்றபோது மனமிரங்கி உதவுவதும் துன்புற்றோரின் துன்பத்தைத் துடைப்பதுவும் மனிதநேயமாகும். மனிதன் தன்னைப்போல் பிற மனிதனிடம் அன்பு

பாராட்டுவது மனிதநேயம் அதாவது சாதி, மதம், உயர்வு, தாழ்வு பாராமல் மக்கள் எல்லோரிடத்தும் அன்பாய்ப் பழகுவது மனிதநேயம் ஆகும். (இலயோலாக் கல்லூரி கட்டுரைக் களஞ்சியம், ப.138) இம் மனிதநேயம் ஒன்றே மனிதனுக்குப் பெருமை சேர்க்கவல்லது, பணம், புகழ், பட்டம், பதவி, அறிவு, அழகு இன்னும் எவ்வளவோ சிறப்புகள் இருந்தாலும் மனிதநேயம் இல்லையெனில் நாம் மனிதர்கள் அல்லர் என்பதை இதன் மூலம் அறியமுடிகின்றது..

"அன்பை அடிக்கல்லாகக் கொண்டு அமைக்கப்படும் அழகான மனிதவலைதான் மனிதநேயம்" (சங்கஇலக்கியத்தில் மனிதநேயம், ப.49) என்று முனைவர் த.வசந்தா அவர்கள் குறிப்பிடுவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

"அனைத்து உயிர்களையும் நேசிக்கும் நல்லியல்பையே மனிதநேயம் என்கிறோம். மனித நேயம் தமிழர் தம் பண்புகளில் மகத்தான நல்லியல்பு என்பதை யாரும் மறுக்க முடியாது மனித நேயத்தைச் சிறப்பாகப் பெற்றுத் திகழ்ந்தவர்கள் நம்முன்னோர்கள். இதனை இலக்கியங்கள் நமக்குத் தெளிவு படுத்துகின்றன." (இலக்கிய வானம், ப.99) என்ற வெ.ரா.இராசகோபால் குறிப்பிடும் கருத்து இங்கு நோக்கத்தக்கதாகும்.

"பிறர்பால் ஊற்றெடுக்கும் கைம்மாறு கருதாத உண்மையான அன்பு, அடுத்தவர் துன்பத்தைத் தீர்க்கத் துடிக்கும் அருட்கருணை, பகைவரிடத்தும் வெறுப்பின் நிழல்படியாத பாசம்,தன்னுயிர் போல் எல்லா உயிர்களையும் பாவிக்கும் பண்புநலம் ஆகிய இவற்றின் சங்கமத்தில் பிறப்பதுதான் மனிதநேயம்" (அன்பிற் சிறந்த தவமில்லை.ப, 122) என்று தமிழருவி மணியன் மனித நேயத்தின் சிறப்பை எடுத்தியம்புகிறார்.

வாழ்க்கை என்பது மனிதன் மனிதனாவதற்குத் தரப்படுகின்ற வாய்ப்பு. அவ்வகையில் ஒரு சிறந்த மனிதனாவதற்கு உரிய அடிப்படைப்பண்பு என்பது ஒன்று இருக்குமே அது அன்பு ஒன்றே என்பதை அறியமுடிகின்றது.

மனிதன் என்பவன் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு வினோபாஜி அவர்கள் "பிறர் துயர் கண்டு துயரப்படுபவர் பிறர் சுகப்படுவதைக் கண்டு சந்தோசம் கொள்பவர்களும் தான் மனிதர்கள் என்கிறார்'' (மேற்கோள்: நவீன்குமார், வினோபாவின் வாழ்வும் வாக்கும், பதிப்புரை) என்று நிவேதிதா சுவாமிநாதன் எடுத்துரைக்கின்றார்.

"ஆறாவது அறிவு விளங்கப்பெற்று அதன் வழி நிற்கும் மனிதன் தன்னுயிரைப் போலவே மன்னுயிரையும் பார்ப்பான். இரக்கமே அவன் உள்ளத்தில் குடி கொண்டு நிலவும். அவன் தனக்கென்று உலகத்தில் வாழான். தன் வாழ்க்கை மற்றவர்க்கே என்று அவன் கருதுவான். அவன் கொலை, களவு, கள், காமம், பொய் என்னும் ஐம்பெரும் பாவங்களுக்கு அஞ்சுவான். அவன் கரணங்களெல்லாம் அன்பு வண்ணமாகப் பொலியும், விலங்கியல்பு அவனிடத்தில் தோன்றுதல் அருமை. அன்னான் பிற உயிர்களின் துன்பத்தைத் தன் துன்பமாகக் கொள்வான். இன்னோரன்ன இயல்புகள் வாய்ந்த ஒருவனையே மனிதன் என்று கூறலாம்." ( திரு.வி.க. மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், ப.31) என்று காந்தியடிகளின் கூற்றை வைத்தும் மனிதனின் சிறப்பை உணரலாம்.

எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்ற விலங்கு நிலையினின்றும் மாறி இப்படித் தான் வாழ வேண்டும் என்ற கொள்கையோடு வாழும் அன்பு வாழ்க்கை நிலையினை இங்கு அறிய முடிகிறது.

மனிதநேயமாவது பிறரை நேசித்தல் மட்டுமன்று எவரையும் வெறுக்காதிருத்தலும், எவ்வுயிர்க்கும் துன்பம் செய்யாதிருத்தலும் மனிதநேயமே ஆகும்.

"அன்பு, நட்பு, கனிவு, கருணை,பக்தி, காதல், வீரம் போன்ற பண்புகளே மனிதனுக்குப் பெருமை சேர்ப்பவை இப்பண்பு நலன்களையே மனிதநேயம் என்கிறோம்'' (மேற்கோள்: இலக்கியத்தில் மனிதநேயம்ப-12) என்று விளக்கம் அளிக்கின்றார். அன்பும், கருணையும் ஒருவருக்கு வாழ்வில் மகிழ்ச்சியை ஈட்டித் தருகின்றன. இதனை, இன்றைய ஆய்வுகள் நமக்குத் தெரிவிக்கின்றன. அவ்வகையில் தெரிந்தவரோ தெரியாதவரோ யாராக இருப்பினும் அவரிடம் அன்பு பாராட்ட வேண்டும் என்பதையும் அறியமுடிகிறது.

தான் கொடுப்பதை யாருக்குக் கொடுக்கிறோம். எவருக்குக் கொடுக்கிறோம். ஏன் எதற்காகக் கொடுக்கிறோம் என்பதை ஆராய்ந்து பார்க்காமல் கொடுக்க வேண்டும். இதுவே மனிதநேயத்தின் உயர்ந்த வெளிப்பாடு என்பதை இங்கு அறியமுடிகின்றது.

மனிதன் எவ்வளவு அறிவைப் பெருக்கி இருக்கிறானோ அந்த அளவு மனிதநேயத்தை வளர்த்துக் கொள்ளவில்லை. மனித நேயமில்லாத அறிவுப்பெருக்கம் துன்பத்தில் முடியும்.

மனித நேயம் என்பது அடுத்த மனிதனிடம் அன்பு காட்டுதல் அவனையும் தன்னைப்போல் ஒருவன் என மதித்தல், சாதி, மதம், நாடு, மொழி ஆகிய கோடுகளைத் தாண்டி மனிதனை மனிதன் என மதித்து அவனிடம் அன்பு காட்டுதல், உடன் உறை மக்கட்கு உற்றுழி உதவுதல், ஏழைகட்கு இரங்குதல், பசிப்பிணி நீக்கி வறுமைப்பிடியிலிருந்து மக்களைக் காத்து அரவணைத்தல் எனப் பலமுகங்கள் கொண்டது." ( எட்டாவது உலகத்தமிழ் மாநாடுசிறப்பு மலர், ப-54) கண்டனூர் மு.தேனப்பன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

"பிறர் துன்பத்தை தன்னுடைய துன்பமாக ஏற்று அதை மாற்ற முயல்வது தான் மனிதநேய நிலை" (மேற்கோள்: க.ஜெயந்தி நாவல்களின் சமூகக் களங்கள், ப.59) என்று பொன்னம்பல அடிகளார் குறிப்பிடுகின்றார்.

இங்கு மனித வாழ்க்கையின் தனிப்பட்ட மகத்துவம் மனம். மனத்தால் வாழ்வதுதான் மனித வாழ்க்கை. அதிலும், பிறர் துயர் கண்டு அவற்றைப் போக்குவதே வாழ்வின் நோக்கம் என்பதை உணர முடிகின்றது. மனித நேயம் அறிவியல் ஒழுகலாறுகளையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. இதன் செயல் முறைகளால் சமூகத்தில் ஓர் சமானியத் தன்மையைக் காண முடிகின்றது. இதனை, மனிதநேயமும் ஒரு தத்துவம் தான். ஏனென்றால் அது மனிதனின் மதிப்பீடுகள் அல்லது உணர்வுகளை அங்கீகரிக்கிறது. எல்லாப் பொருள்களையும் பற்றிய அளவீடுகளை அவனிடம் உருவாக்குகிறது. மனிதனின் இயற்கையான குணங்களை, அவற்றின் எல்லைகளை அல்லது விருப்பங்களையும் கருத்துக்களையும் வெளிப்படுத்துகிறது. (ஆய்வுச்சிந்தனைகள், தொகுதி-2 பக், 292,293) என்று சு.மாதவன் குறிப்பிடுகின்றார். இதனால் இது ஒரு பயன்பாட்டுத் தத்துவமாகவும் பண்பாட்டுத் தத்துவமாகவும் விளங்கி நிற்கின்றது என்பதைக் காண முடிகின்றது.

நாத்திக இலக்கியங்களில் பேசப்படுகின்ற மனிதநேயம் என்பது. மனித ஆற்றலை மதிப்புடன், மனிதனை மற்ற கடவுள் முதலான கற்பனை ஆற்றல்கள் முன்னே மண்டியிட்டுச் சரணடையச் செய்யாமல் காப்பதுடன் பகுத்தறிவாளனாகவும் தலை நிமிரச் செய்கிறது." ( தமிழர் தருக்கவியல், ப.161)என்று முனைவர் க.நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிடுவதிலிருந்து விளங்குகின்றது.

"இறைவனைப் பூசை சடங்குகளில் வழிபடுவதை விட உடன் வாழும் மனிதனுக்கு உதவுவதே மதம் என்கின்றனர்." (மதங்களும் மனித ஒற்றுமையும், ப.35) எனச் செல்வநாதன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இங்கு மனிதனை மனிதன் நேசிப்பதற்கு மதம் என்னும் கருவி அவசியமற்றது என்பதை உணரமுடிகின்றது. "கல்வியறிவு,

செல்வச் செழிப்பு, பட்டம், பதவி ஆகியவை பெருமளவில் ஒருவனுக்குக் கிடைத்திருந்தாலும் அவற்றுடன் மனிதநேயம் என்பது அவனிடம் இல்லை என்றால் சேர்ந்துள்ள மற்ற வசதிகளால் அவனுக்கோ அவன் சார்ந்த சங்கத்திற்கோ எந்தப் பயனும் இல்லாமற் போய் விடும்."( தினமணி நாளிதழ், *19.11.2003*, ப.8) என்று இரா.செழியன் மறந்து போகாத மனிதநேயம் என்ற தலைப்பின் வழி மனிதநேயத்திற்கு வரையறை செய்கின்றார்.

''மனிதம் படைத்த மாமனிதர் அப்துல்கலாம் அவர்கள், உலகம் போற்றும் அறிவியல் அறிஞர் விண்வெளியில் சாதனை படைத்தவர், ஏவுகணைகளுக்கு ஏற்றம் தந்தவர். அற்புதமான ஆசிரியர், ஆராய்ச்சியாளர், அன்பான எளிமையான குடியரசுத்தலைவர், சிறந்த நிர்வாகி, எதார்த்தமான பேச்சாற்றல் மிக்கவர். இவை அனைத்தும் ஒருங்கிணைத்து உயர்ந்து நிற்கக் காரணம் மனிதநேயம் கொண்ட மாமனிதர் என்பதுதான்." ( உலக உத்தமர் கலாம், ப.144) என்று சிந்தனைக் கவிஞர் கவிதாசனும் மனித நேயத்தின் மதிப்பை விளக்குகின்றார்.

### மனித நேயக் கோட்பாடுகள்

மேலைநாட்டார் மானுடம் என்பதற்கும் மனிதாபிமானம் என்பதற்கும் கூறும் பொருளானது மனிதனைப் பற்றிய ஒரு கோட்பாடாகவே அமைந்துள்ளன. அவ்வகையில் ஐரோப்பிய நாடுகளில் மனித நடவடிக்கைகள் அனைத்தையும் சீர்தூக்கிப் பார்த்து மதிப்பிட்டு ஆய்வதற்கு அங்கு மதச் செல்வாக்கு உரிமை பெற்று விளங்கியது. மனிதனை முதன்மைப்படுத்தி மனித இயல்புகளைக் கண்டுணர்வதற்கு மதச் செல்வாக்கு தடையாக இருந்தது எனலாம். இந்நிலையில் *15, 16* ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட மறுமலர்ச்சி இயக்கம் இதற்கோர் தீர்வு காண முற்பட்டது. "மனிதனை மனிதநிலை உணர்வு கொண்டு நோக்கும் அப்புதிய தீர்வு முறையே மனிதநேயம் அல்லது மனித இனநலக் கோட்பாடு" ( மனிதநேயச் சிற்பி, ப-*15*)என்று முனைவர் சி.சித்ரா அவர்கள் இதனை விளக்குகின்றார். மனித இனத்தின் துயரங்களையும், துன்பங்களையும் குறைத்து அவர்களின் மகிழ்ச்சியினை அதிகரிப்பது மனித இன நலக்கோட்பாட்டின் அடிப்படை எனலாம். "மனிதஇனநலக் கோட்பாடு என்பது மேற்கு ஐரோப்பாவில் மறுபிறவி எடுத்துள்ள குணநலன் என்ற நிலையைக் குறிக்கும் தற்காலிகவிருப்பங்கள் மற்றும் மனிதனுடைய திறமைக்கு முக்கியமளிக்கின்ற மனோநிலை" (Encyclopedia Britannica, Volume- II, p-825)என்று கலைக்களஞ்சியம் குறிப்பிடுகின்றது.

"உலகம் போரின்றி வாழவும் உலக மக்களிடையே அன்பு தழைக்கவும், ஏற்றத்தாழ்வுகள் இல்லாதொழிந்து ஒப்புரவு நிலைக்கவும் வழி வகுக்கும் ஓர் உயரிய கோட்பாடே மனிதநேயம்'' (பாரதிதாசன் படைப்புகளில் மனிதநேயம், ப-32) என்று பேராசிரியர் இரா.சக்குபாய் அவர்கள் குறிப்பிடுவதும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

"மனித நேயம் எனும் இக்கோட்பாடு கிரேக்க செவ்வியல் இலக்கியங்களைப் போன்ற பழமையும் 20 ஆம் நூற்றாண்டிற்கேயுரிய புதுமையும் கொண்டு திகழ்கின்றது. பரந்துபட்ட பொருட்செறிவுடைய இக்கோட்பாடு. தன்னுரிமை கொண்ட மனித மாண்பை பகுத்தறிவாளனாகிய அம்மனிதன் பெற்றுள்ள உண்மை, நேர்மை ஆகிய பண்புகளை மையமாகக் கொண்ட ஒரு மெய்யியலாகவும் உருவாயிற்று. இம்மை வாழ்வில் கிடைக்கும் எல்லா நுகர்வுகளையும் மனிதன் நுகர வேண்டும் என்பதும் வேறு எந்த ஆற்றலும் மனித ஆற்றலை விஞ்சக் கூடியதாக இல்லை என்பதை வலியுறுத்துவதும் இதன் இலட்சியமாகும்'' (புறநானூற்றில் வாழ்வியல் விழுமியங்கள், ப.192) என்று டாக்டர் கு.சிவப்பிரகாசம் குறிப்பிடுகின்றார். இதன் படி மனிதனை மனிதத்தன்மையோடு அணுகுதலும், அவனது உரிமைகளுக்கு மதிப்பளித்தலும் மனித ஆற்றலுக்கு இணையாக வேறொரு ஆற்றலை ஈடுகொள்ள இயலாது என்பதையும் அறியமுடிகின்றது.

“மனித நேயக் கோட்பாட்டின் அடிப்படை நோக்கமே மனிதனின் இம்மை வாழ்வைப் போற்றுவது தான்” ( தமிழர் தருக்கவியல், ப-160) என்று முனைவர் க.நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிடுகின்றார். இதன் வழி இம்மை வாழ்வில் பிறருக்குப் பயன்பட வாழ்தல் ஒன்றே மனித நேயத்தை வளர்க்கும் என்பதை அறிய முடிகின்றது.

‘‘மனித நேயம் மனிதனது பெருமையையும் உரிமையையும் மதிக்கும் வகையில் அமைந்ததொரு கோட்பாடு சமயம் மற்றும் இனவெறிக் கொடுமை, சமயக் காழ்ப்பு, மாற்றுக் கோட்பாட்டை வெறுத்தல் ஆகிய அனைத்து இயல்புகளையும் களைவது இதன் நோக்கம். பொருள் முதலியவை சார்ந்த இக்கோட்பாடு மனித இனத்தின் விடுதலைக்காக உரத்து முழங்குவதுடன் சமயங்களையும் அதன் சடங்குகளையும் முற்றாக எதிர்ப்பது என்ற இருவேறு கருத்துக்கள் மனிதநேயக்கோட்பாட்டைப் பற்றி நிலவுகின்றன” (மனிதநேயச் சிற்பி, ப.232) என்று முனைவர் சி.சித்ரா குறிப்பிடுகின்றார்.

இவ்விருவேறுபட்ட கருத்துக்களை நோக்கும் பொழுது மனிதநேயம் என்பது மனிதனின் ஆற்றலை மதிப்பது, இனவெறியாலோ, மதவெறியாலோ மனிதன் அடக்கப்படக் கூடாது. மனித ஆற்றல் எந்நிலையிலும் அழிக்கப்படக்கூடாது என்ற கூறுகளை உடையதாகும் என்பதை அறியமுடிகின்றது.

இக்கோட்பாடு இனம், மொழி, மதம், நாகரீகம், நாடு முதலிய எல்லைகளைக் கடந்து எல்லோரும் சமம் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டது என்பதையும் உணர முடிகின்றது.

## முடிவுரை

மனிதன் மனிதனாக இப்பூமியில் பரிணாமித்து வாழ்வதற்கு உகந்தது மனிதநேயம்.மனிதநேயம் கொண்ட மனிதன் வாழ்க்கையே சிறந்த வாழ்க்கையாகும். இத்தகைய பண்பினால் தான் மட்டும் வாழாது இப்பூமியில் தோன்றிய தாவரங்கள் மற்றும் விலங்குகள் போன்ற அனைத்து உயிரினங்களையும் வாழவைக்க முடியும்.

## அடிக்குறிப்புகள்

1. Encyclopedia Britannica, Volume- II, p-825
2. சு.மாதவன், ஆய்வுச்சிந்தனைகள், தொகுதி-2 பக், 292,293
3. முனைவர் சி.சித்ரா மனிதநேயச் சிற்பி, ப.232
4. முனைவர் க.நெடுஞ்செழியன் தமிழர் தருக்கவியல், ப.161
5. பேராசிரியர் இரா.சக்குபாய் பாரதிதாசன் படைப்புகளில் மனிதநேயம், ப-32
6. சிந்தனைக்கவிஞர் கவிதாசன்,உலக உத்தமர் கலாம், ப.144
7. கண்டானூர் தேனப்பன்,எட்டாவது உலகத்தமிழ் மாநாடுசிறப்பு மலர், ப-54

❑❑❑